## 6. 1980–81 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கை

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, 1980–81 ஆம் ஆண்டிற்கான துணை மானிய கோரிக்கைகளை அவையில் வைக்க முன் வந்துள்ளேன். வரவு-செலவுத் திட்டத்தில் இடம் பெறாத திட்டங்களுக்கும், கூடுதலாக நிதி ஒதுக்கம் தேவைப்பட்ட இனங்களுக்கும் தேவையான ரூபாய் 50.41 கோடி நிதி ஒதுக்கம் பெற துணை மானியக் கோரிக்கைகள் அவையின் முன் வைக்கப்பட்டு உள்ளன. எந்தெந்தத் திட்டங்களுக்கு எவ்வளவு தொகை தேவைப்படுகிறது என்கிற விவரம், இணைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. துணை மானிய கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கிய இனங்களை அவை உறுப்பினர்களின் கவனத்திற்கு கொண்டுவர விழைகிறேன்.

2. வரவு-செலவுத் திட்ட உரையில் அறிவித்தவாறு, விவசாயிகளுக்குக் கூட்டுறவு கடன்கள் தொடர்பாக சலுகைகள் வழங்குவதற்கு மத்தியக் கூட்டுறவு சங்கங்களுக்கு ரூபாய் 42 கோடி வழிவகை முன்பணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயக் கூட்டுறவு கடன் சங்கமும், அரசு அளித்துள்ள சலுகைகளினால் பயனடையும் விவசாயிகளின் கணக்குகளில் செலுத்த வேண்டிய தொகைகளின் விவரங்களைச் சேகரித்த பின்னர், இந்த முன்பணம் மானியமாகக் கணக்கில் கொள்ளப்படும். இது தவிர, மத்தியக் கூட்டுறவு வங்கிகள் கடன்களை ஒழுங்காகத் திருப்பிச் செலுத்திய விவசாயிகளுக்குத் தொடர்ந்து கடன் வழங்கும் தகுதி பெறுவதற்காக 7 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கு 22.57 கோடி ரூபாய் முன்பணமாக அனுமதிக்கப்பட்டுள்ளது. இதனால் ஏழை எளிய விவசாயிகள் தொடர்ந்து கடன் பெற ஏதுவாகிச் சிரமங்கள் தவிர்க்கப்படும் என அரசு கருதுகிறது. மின் உற்பத்திக்குத் தேவையான எரிபொருள்களின் விலை உயர்வாலும், விவசாயிகளிடமிருந்து மின் கட்டண வசூலில் பாதிப்பு ஏற்பட்டதாலும், திட்டமிட்ட பணிகளை இவ்வாண்டு மேற்கொள்வதற்கு மின் வாரியத்திடம் போதிய நிதி வசதி இல்லை ; இந்நிலையைத் தவிர்க்க, அரசு மின் வாரியத்திற்கு 15 கோடி ரூபாய் கடன் வழங்கும்.

3. அரசு இவ்வாண்டு முதல் தீவிரமாகச் செயல் படுத்தி வரும் கிராமத் தன்னிறைவுத் திட்டத்தில், குடிதண்ணீர் வழங்குவது முக்கியமான பகுதியாகும். வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட ரூபாய் 16 கோடியை விட கூடுதலாக ரூபாய் 4 கோடி குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு இவ்வாண்டு செலவிடப்படும். ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லாத காரணத்தினால் தன்னிறைவு திட்டத்திற்கு பல ஒன்றியங்களால் தங்கள் பங்கைச் செலுத்த இயலவில்லை.

அவைகளுக்கு முன்பணமாக 3.35 கோடி ரூபாய் வழங்கப் பட்டது. தன்னிறைவுத் திட்டத்தின்கீழ் நடைபெறும் வேலைகளின் தரத்தைந் தணிக்கை செய்ய, தனி தொழில் நுட்பப் பணியாளர் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

4. அண்மையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத் தமிழ் மாநாட்டின்போது மதுரை நகரில் பல வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மதுரையில் உள்ள குடிசைப் பகுதிகளில் சாலைகள், பொதுச் சுகாதார வசதிகள் போன்ற இன்றியமையாத வசதிகளுக்கு ரூபாய் 3.11 கோடி செலவு அனுமதிக்கப்பட்டுள்ளது. பெருந் திரளாக வரும் மக்களின் சுகாதார நலனைக் கருதி 84 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பிடங்கள் கட்டும் பணிகளும் 24.79 இலட்சம் ரூபாய் செலவில் பொதுச் சுகாதார நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மதுரை நகரை அழகுடுத்த, சோடியம் விளக்குகள் 12.25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டன. இச்செலவினங்களுக்கு மாமன்றத்தின் இசைவை இந்த மானிய கோரிக்கைகளின் மூலம் அரசு கோருகிறது.

5. பி. டி. இராசன் கால்வாயிலிருந்து நில மட்டத்திற்கேற்ற கால்வாய் ஒன்று ரூபாய் 42.12 இலட்சம் செலவில் வெட்டுவதற்கான திட்டத்திற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினால் 1,341 ஏக்கர் நிலங்கள் கூடுதல் பாசனம் பெறும். 48 இலட்சம் ரூபாய் செலவில் பெரியார் அணை வலுப்படுத்தப்படும். கன்னியாகுமரியிலும் சென்னையில் இராயபுரத்திலும் கடல் அரிப்பினால் ஏற்படும் சேதங்களைத் தவிர்க்க முன் நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு, இம் மானியக் கோரிக்கையில் ரூபாய் 2·14 கோடி செலவிற்கு அவையில் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

6. சென்னை நகரில், லாரிகளின் போக்குவரத்தினால் ஏற்படும் நெரிசல்களைத் தவிர்ப்பதற்குப் புற நகரில் மூன்று லாரி, பஸ் நிற்கும் இடங்களைக் கட்டுவதற்கு ரூபாய் 3.34 கோடி செலவில் ஒரு திட்டத்தை அரசு வகுத்துள்ளது. பெட்ரோலியப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும், மற்ற உறுப்புப் பொருள்களின் விலை ஏற்றத்தினாலும் போக்குவரத்து நிறுவனங்களின் நிதி நிலைமை பாதிக்கப்பட்டது. இதன் காரணமாக, நவம்பர் மாதம் முதல் கட்டணங்களை உயர்த்திய பே திலும், நிதி நிலைமையைச் சீர் செய்ய போக்குவரத்து நிறுவனங்களுக்கு 10.81 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளிடமிருந்து கடன் வசூலிப்பதில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை காரணமாக, மத்திய ரிசர்வ் வங்கி, விவசாய மறுநிதி வளர்ச்சி நிறுவனம் ஆகியவற்றிடமிருந்து பெற்ற கடன்களைத் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி திருப்பிச் செலுத்த

இயலாத நிலை ஏற்பட்டது. இக்கடன்களுக்கு உறுதி வழங்கியுள்ளதால் இவ்வங்கிக்கு அரசு 20 கோடி ரூபாய் முன்பணமாக வழங்கியுள்ளது.

7. மானிய கோரிக்கையில் உள்ள சில முக்கிய செலவினங்களை மட்டுமே மேலே சுட்டிக் காட்டியுள்ளேன். மானியக் கோரிக்கையில் அரசு கேட்டுள்ள தொகையை வழங்கி, இத்திட்டங்களுக்கு அனுமதி அளிக்குமாறு அவையை வேண்டி அமருகிறேன்.

[முற்பகல் 10—50]

**7. ஆளுநர் உரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி.)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஆளுநர் உரைக்கு நன்றியுரைக்கும் தீர்மானத்திற்கு திருத்தங்கள் இப்போது மொழியப் பெற்று வழிமொழியப் பெற வேண்டும். பிறகு உறுப்பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் தன் உரையைத் துவங்குவார்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

இறுதியில் கீழ்க்காணும் திருத்தங்களைச் சேர்த்துக்கொள்ளவும்:—

(1) தமிழ்நாட்டில் விவசாயிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அனைத்து கடன்களையும், தள்ளுபடி செய்யவேண்டிய அவசியம் பற்றியும் ;

(2) தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் மின் இணைப்பு வேண்டுவோர் 90 நாட்களுக்குள் மோட்டார் வாங்கி பதிவு செய்தால் உடன் இணைப்பு தரலாம் என மின்வாரியம் தாக்கீது கொடுத்து பல்லாயிரம் விவசாயிகள் மோட்டார் வாங்கி பதிவு செய்து மூன்று ஆண்டுகளாக இணைப்பு கிடைக்காமல் அவதியுறும் விவசாயிகளுக்கு உடன் இணைப்பு கொடுக்கப்பட வேண்டிய அவசியம் பற்றியும்

ஆளுநர் உரையில் குறிப்பிடாதது வருந்தத்தக்கது.

**திரு. சு. பாலன்** : நான் அதை வழிமொழிகிறேன்